2013 அக்டோபர் 24]

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விற்பனைக் குழுமூலம் இந்த உலர் களம் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. வேளாண் விற்பனைக் குழுவிற்கு அரசுக்குச் சொந்தமான நிலத்தையோ, தனியாருக்குச் சொந்தமான நிலத்தையோ அவற்றை விலையில்லாமல் அளிக்கும்பட்சத்தில், அந்தப் பகுதியில் பயிரிடப்படும் உணவு தானியங்கள் மற்றும் இதர பயிர்களின் பரப்பின் அடிப்படையில், தேவைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, புதிய சிமென்ட் உலர் களங்கள் அமைக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம்

***28271—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நாகர்கோவில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

ரூ.1.50 கோடி நிதியுதவி செய்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 விழுக்காடு கல்வி அறிவு பெற்று, தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தின் நீண்டநாள் கோரிக்கையான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கூட்டம் கட்டித் தருவதற்குரிய ஏற்பாடு செய்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

500-க்கும் மேற்பட்ட நபர்கள் குடும்பத்தோடு, பிள்ளைகளோடு, வேலைவாய்ப்புக்காக பதிவு செய்ய வருவார்கள். அவர்கள் எல்லாம் வந்து காத்திருப்பதற்கு, அவர்களுடைய வாகனங்களை நிறுத்துவதற்கு, வெயிலானாலும், மழையானாலும் அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஏற்ற வசதியான வகையில் தற்போது கட்டப்படுகின்ற வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம் கட்டப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டு வரும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வசதி இல்லாத காரணத்தினால், 2011 மற்றும் 2012 காலகட்டத்திலே பதிவு செய்யமுடியாமல் உள்ளவர்களும் உண்டு. அப்போது பதிவு செய்யத் தவறியவர்களுக்கு மீண்டும் பதிவு மூப்பு அடிப்படையில் பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, 10 மாவட்டங்களிலே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்ட தலா

2013 அக்டோபர் 24]

ரூ.1.50 கோடி வீதம் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நாகர்கோவில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டடம் கட்டுவதற்கு வேலைவாய்ப்புத் துறையால் 6-1-2012-ல் அரசாணை வெளியிடப்பட்டு, அதனைத் தொடர்ந்து பொதுப் பணித் துறைமூலம் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று, பரிசீலனை செய்யப்பட்டு, இன்றைக்குப் பணிகள் முடிகின்ற தருவாயில் உள்ளன. இன்னும் ஒரு சில மாதங்களில் வேலைவாய்ப்புக் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும். கட்டடப்பட்டு வருகின்ற அந்தப் புதிய கட்டத்தில் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்ய வருகின்றவர்களுக்கு போதிய வசதிகளைச், சிறப்பாகச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே,ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி என்னவென்றால், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வசதி இல்லாததால், 2011, 2012 ஆம் ஆண்டுகளிலே பதிவு செய்ய வந்தவர்கள் பதிவு செய்ய மறுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பதிவு செய்ய மறுக்கப்பட்டவர்கள், பதிவு மூப்பு அடிப்படையில், பதிவு செய்ய அனுமதிக்கப்படுவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எந்தவொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், யாருக்கும் பதிவு செய்ய அனுமதி மறுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏதேனும் மறுக்கப்பட்டிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறினால், அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

9—

இரயில்வே மேம்பாலம்

*__10312__—**திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரம், பெத்லேகம் பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரம், பெத்லேகம் பகுதியில் இரயில்வே மேம்பாலம், வைப்பு நிதி அடிப்படையில் மாநில அரசின் நிதியின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெத்லேகம் பகுதியில் ஏறத்தாழ 40,000 மக்கள்